**நாரம்மல பிரதேச சபை**
**குருணாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 30 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 ஜூன் 16 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜூலை 22 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நாரம்மல பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 953,900 பெறுமதியான காணிகள், நாகொல்ல வத்த – மெதகொட இல் அமைந்துள்ள காணி மற்றும் 07 கட்டிடங்களின் பெறுமதி கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது. | கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்கை தயாரிக்கும் போது அதில் உள்ளடக்க நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |
| (ஆ) | ரூபா 5,500,000 பெறுமதியான 03 காணிகள் ரூபா. 550,000 என காட்டப்பட்டிருந்ததால் காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா. 4,950,000 குறைவாக இறுதிக் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | சரியான பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்கை தயாரிக்கும் போது அதில் உள்ளடக்க நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுகளில் காணப்படும் கணக்கீட்டு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அவற்றிற்கு உரிய உப ஏடுகளில் காணப்படும் மீதிகளுக்கு இடையில் ரூபா 3,301,357 இணக்கமின்மை காணப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடுகளை ஒப்பிட்டு கணக்கை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்படும். | எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்கள் மற்றும் உப ஏடுகள் நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ரூபா 8,677,904 பெறுமதியான கணக்கீட்டு விடயங்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுகளில் காணப்படும் கணக்கு மீதிகள் தொடர்பான ஆவணங்களை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. |

**1.4 இணங்காமைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காத சற்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன்களுடனான தொடர்பு | பெறுமதி ரூபா. | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி விதி 201 | 1,150,532 | பொதுவான போட்டி முறையில் அல்லாது தெரிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனத்திடம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கு இணங்குகின்ற பிரகாரம் சபை நிதியத்திற்கு நன்மையான விதத்தில் தரமான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இனிமேல் பொதுவான போட்டி விலைகளின் கீழ் கொள்வனவு செய்யப்படும் என்பதை தயவாக அறியத் தருகிறேன். |
| (ஆ) | வேறு சுற்றறிக்கை | | | | |
| | உள்ளுராட்சி மன்ற ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆம் திகதிய 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கை | | 5 வருடங்களுக்கு ஒரு தடவை அல்லது குத்தகை வாடகை மதிப்பீடொன்று இல்லாது தம்பதெனிய உப அலுவலகத்திற்குச் சொந்தமான 11 கடைகள் நீண்ட காலமாக குத்தகைக்கு விட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தம்பதெனிய உப அலுவலகத்திற்குச் சொந்தமான கடைகள் கடந்த வருடத்தில் பழுது பார்க்கப்பட்டதுடன் புதிய மதிப்பீட்டிற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்குக் கையளிக்க நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |

2. நிதி மீளாய்வு

--------------------

2.1 நிதி விளைவுகள்

-------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 18,948,783 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 25,146,518 ஆக இருந்தது.

2.2 வருமான நிர்வாகம்

-------------------

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாரான வருமானம், மற்றும் நிலுவை வருமானம்

---------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா. 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| I. | வீதவரியும் வரியும | 12,056 | 13,023 | 12,123 | 3,016 | 8,443 | 12,536 | 12,022 | 2,402 |
| II. | வாடகை | 25,405 | 26,216 | 24,574 | 194 | 25,430 | 24,227 | 24,166 | 145 |
| III. | அனுமதிப்பத் திரக் கட்டணங்கள் | 1,328 | 822 | 822 | - | 1,311 | 1,013 | 1,013 | - |
| IV. | ஏனைய வருமானம் | 85,095 | 87,999 | 89,690 | 41,006 | 75,841 | 80,785 | 116,734 | 32,465 |
| மொத்தம் | | 123,884 | 128,059 | 127,209 | 44,216 | 111,025 | 118,561 | 153,935 | 35,012 |

2.2.2 வீதவரியும் வரியும்

----------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா. 3,015,711 தொகையில் 2020 ஏப்ரல் 30 இல் மேலும் ரூபா. 2,419,387 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | வருடத்திற்குரிய வருமானம், கட்டளைகள் மற்றும் சட்டத்தின் பிரகாரம் அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் நிலுவைத் தொகை அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எஞ்சிய நிலுவைத் தொகை விரைவாக அறவிடப்பட நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |

**2.2.3 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடைகள் வாடகைக்கு விடுதல் தொடர்பாக கையெழுத்திடப்பட்ட ஒப்பந்ததின் படி வாடகைக்காரர் மூலம் உடைமைகளை மற்றொருவருக்கு விற்றல், பொறுப்புச் சாட்டல் அல்லது வாடகைக்கு விடுதல் செய்ய முடியாதாயினும் நாரம்மல பொதுச் சந்தைத் தொகுதியில் 02 கடைகள் மற்றும் நாரம்மல புதிய சந்தைத் தொகுதியில் 05 கடைகள் உப குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. | ஒப்பந்ததின் பிரகாரம் மற்றும் கடைகள் குத்தகைக்கு விடுதல் தொடர்பாக உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் (வடமேல்) சுற்றறிக்கை விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வாடகை உரிமையாளரின் மூலம் உப குத்தகைக்கு விடப்பட்டுள்ளதா என பரீட்சித்து அது தொடர்பாக செயற்பாடுகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |

**2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 3,353,470 மற்றும் முத்திரைக்கட்டணம் ரூபா 29,829,010 ஆகும். | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நீதிமன்ற தண்டப்பணத் தொகையில் ரூபா 2,437,706 மற்றும் முத்திரைக் கட்டணத் தொகையில் ரூபா. 12,885,716 கிடைக்கப் பெற்றதாக அறியத் தருகிறேன். |

**03. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

**எதிர்பார்த்த விளைவு மட்டத்தை பெற்றுக் கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கிவுல்கல்லே தும்மலவத்த நீர்த் திட்டம் தொடர்பாக நீர் மோட்டர் ஒன்று வழங்கிப் பொறுத்தி 02 வருடங்கள் கடந்து இருந்ததுடன் பிரதேச மக்களுக்கு நீர் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. நீர் இறைக்கும் இடத்திலிருந்து நீர் சேகரிக்கும் தாங்கிக்கு நீரை | எதிர்பார்த்த பிரதிபலனைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 பிரதேச சபையை வலுப்படுத்தும் திட்டத்தின் கீழ் நீர்க்குழாய் (274 மீற்றர் தூரம்) தொடர்பாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளதுடன் அங்கீகாரம் கிடைக்கப் |

| | | |
|---|---|---|
| வழங்க முடியுமாக இருந்தும் நீர் விநியோகிக்கும் குழாய் உடைந்து மற்றும் தடுக்கப்பட்டு இருந்தமையே காரணமாக அமைந்தது. | | பெற்றதும் அதனை மீளமைக்க நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் ரூபா. 54,322,570 அறவிடப்பட வேண்டிய தொகையில் ஒரு வருடத்திற்கும் மேலாக பெற வேண்டிய கணக்கு நிலுவையில் இருந்த நிலுவை ரூபா. 1,507,707 ஆகும். | மேலும் பெற வேண்டிய நிலுவை அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒரு வருட காலத்திற்கும் மேலாக பெற வேண்டிய கணக்கு நிலுவை ரூபா. 1,507,707 இல் இதுவரை ரூபா. 1,377,997 தொகை அறவிடப்பட்டிருப்பதாக அறியத் தருகிறேன். |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 இல் செலுத்த வேண்டிய கணக்கு மீதியில் ஒரு வருட காலத்திற்கும் மேலாக இருந்த நிலுவை ரூபா. 8,329,138 ஆகும். | மேலும் பெற வேண்டிய நிலுவை அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 திசெம்பர் 31 இல் செலுத்த வேண்டிய கணக்கு மீதி ரூபா. 31,112,339 தொகையில் இதுவரை ரூபா. 10,076,016.78 அறவிடப்பட்டிருப்பதுடன் ஒரு வருட காலத்திற்கும் மேலாக செலுத்த வேண்டிய கணக்கு மீதி ரூபா. 8,329,138 தொகையில் இதுவரை ரூபா. 2,687,460 தொகை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

#### 3.3.1 ஊழியர் வெற்றிடங்களும் மிகையும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இடைநிலை பிரிவில் 04 பதவிகளுக்கு வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் ஆரம்ப நிலை பிரிவில் 08 வெற்றிடங்களும் அரச நிர்வாக சுற்றறிக்கை 25/2014 இன் கீழ் நிரந்தரமாக்கப்படுவதாக இருந்தாலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறாத 12 ஊழியர்கள் மேலதிகமாகக் காணப்பட்டனர். சாதாரண அல்லது ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட | அத்தியவசிய வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு மிகை முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சுருக்கத் தகவல்கள் உண்மை என்பதை அறியத் தருகிறேன். |

| | | |
|---|---|---|
| உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் 15 பேர் அங்கீகரிக்கப்பட்ட பணிக்குழுவை விட அதிகமாக சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். | | |
| (ஆ) அரச நிர்வாக சுற்றறிக்கை 25/2014 இன் கீழ் இணைத்துக் கொள்ளப்பட்ட 05 ஊழியர்கள் பதவிகளுக்கு உரிய கடமைகளுக்கு இணைக்கப்படாமல் அலுவலக நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | ஒவ்வொரு பதவிக்கும் உரிய கடகைளைப் பொறுப்பேற்று பொதுமக்கள் சேவைகளை நடாத்திச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அரச நிர்வாக சுற்றறிக்கை 25/2014 இன் கீழ் இணைத்துக் கொள்ளப்பட்ட அச் சேவையாளர்கள் கடமைகளுக்கு இணைக்கப்பட்டு இருப்பது நிறுவனத்தின் சேவை முக்கியத்துவம் மற்றும் உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை காரணமாகவாகும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 பொறுப்பேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தெலிகனு அங்க தாய், சேய் நலன்புரி நிலையம் நடாத்திச் செல்லும் இடத்தை பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பொறுப்பேற்கப்படாத சொத்துக்கள் பொறுப்பேற்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | தெலிகனு அங்க தாய், சேய் நலன்புரி நிலையம் நடாத்திச் செல்லும் இடம் சபையின் பெயரிற்கு பொறுப்பேற்கும் நடவடிக்கை தொடர்பாக உரிய நிறுவனத்துடன் செயற்பட்டு வருவதாக குறிப்பிடுகின்றேன். |

### 3.5 கொள்வனவு

### 3.5.1 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ரூபா. 321,042 பெறுமதியில் தார் இடப்பட்டு புதுப்பிக்கப்பட்ட நாரம்மல சிசிர மாவத்த பாதையில் 3x.15, 1x.3, 4.3x.3, 3 (1+.5) மீற்றர் அளவிற்கு 08 இடங்களில் 4.38 rJU மீற்றர் பரப்பளவிற்கு கற்கள் கழன்று காண்கள் உருவாகி இருந்தது. | நிர்மாணம் தொடர்பாக முறையான மேற்பார்வையொன்று செய்யப்பட வேண்டியதுடன் இருக்கின்ற குறைபாடுகளை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சேதமடைந்த இடங்கள் முறையாக சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக தயவாக அறியத் தருகிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ரூபா. 688,987 பெறுமதியில் செய்யப்பட்ட பொல்கஸ்யாய பாதை பௌதீக ரீதியாக பரீட்சிக்கும் சந்தர்ப்பமாகும் போது பாதையின் இருபுறம் மற்றும் மத்தியில் 15 இடங்களில் 16.26 சதுர மீற்றர் அளவில் சேதம் ஏற்பட்டு கற்கள் அகற்றப்பட்டுக் கொண்டிருந்தது. உரிய தொழிலின் மதிப்பீடு, அளவுப் பத்திரம், செய்யப்பட்ட வேலையின் பெறுமதி, பொருள் பயன்பாடு தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இருக்கின்ற குறைபாடுகளை சீர் செய்து செயற்திட்டக் கோவைகள் நாளது வரையாக பேணப்பட வேண்டும். | இப் பாதையின் சுமார் சேதமடைந்த 15 இடங்களை முறையாக சரிசெய்யப்பட நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |
| (இ) | ரூபா. 2,501,169 பெறுமதியில் செய்யப்பட்ட நாரம்மல மயுரபாத பாடசாலை மற்றும் பன்சல் மாவத்த புனர்நிர்மாணம் செய்யும் செயற்திட்டத்தில் விகாரை வீதியில் 6.3 (.8 + .3 / 2) மீற்றர் அளவு பாதை சேதமடைந்து கற்கள் கழன்று அகற்றப்பட்டிருந்தது. 6X.3 மீற்றர் அளவு ஓரப் பகுதி உடைந்து கற்கள் அகற்றப்பட்டிருந்தது. இவ்விரு பாதைகள் தொடர்பாக முதலாம் மற்றும் இரண்டாம் தடவைகள் தார் இடுவதற்கு 5,397.4 லீற்றர் தாருக்காக ரூபா. 757,540 செலவிடப்பட்டிருந்ததுடன் பாதை முழுவதும் முறையாகத் தார் இடப்பட்டிருக்கவில்லை. | நிர்மாணம் தொடர்பாக முறையான மேற்பார்வையொன்று செய்யப்பட வேண்டியதுடன் இருக்கின்ற குறைபாடுகளை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உடைந்துள்ள பகுதி முறையாக மீண்டும் சரிசெய்யப்படுவதாக தயவாக அறியத் தருகிறேன் அத்துடன் விகாரை வீதியில் இரண்டாம் தடவை தார் இடும் போது விசிரப்படுவதைத் தடுத்து மீண்டும் முறையாக அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகிறேன். |
| (ஈ) | சிரிகல வீதி புனர்நிர்மாணம் செய்யும் செயற்திட்டத்தில் வேலை விடய இலக்கம் 01, 05 மற்றும் 08 இன் கீழ் 3 சந்தர்ப்பங்களில் ரூபா. 627,148 பெறுமதியான 4,076.40 லீற்றர் தார் பயன்படுத்தப்ப ட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் பாதையின் மேற்பரப்பில் முறையாக தார் இடப்பட்டிருக்க வில்லை. | நிர்மாணம் தொடர்பாக முறையான மேற்பார்வையொன்று செய்யப்பட வேண்டியதுடன் இருக்கின்ற குறைபாடுகளை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆரம்ப ஒட்டல் சில இடங்களில் கொங்கிறீட் இற்கு இறுக்கமாகப் பிணைக்கப்பட்டிராமையால் (சேறு அல்லது தூசு நன்றாக நீக்கப்படாத காரணத்தால்) சில இடங்களில் முறையாக தார் ஊற்றுதல் இடம்பெற்றிருக்கவில்லை. அவ்விடங்களை மீண்டும் முறையாக அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் |
| (உ) | மொறகொல்ல சபை மண்டபத்தைச் சூழ வலை அமைக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா. 235,746 செலுத்தப்பட்டிருந்தாலும் மதிப்பீட்டிற்கு இணங்காத விதத்தில் பிரதான வெளிப்புற சட்டத்திற்கு | மதிப்பீட்டின் பிரகாரம் உரிய செயற்திட்டம் செயற்படுத்தப்படுவது தொடர்பாக மேற்பார்வை செய்யப்பட வேண்டும். | செயற்திட்டத்தில் குறைபாடுகளை ஏற்றுக் கொள்வதுடன் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | 37 × 31 ×3 மி.மீ. வலைந்த இரும்பு பயன்படுத்தப்பட்டு, 600 மி.மீ. இடைவெளிக்குப் பதிலாக 700, 800 மி.மீ. இடைவெளிக்கு இரும்பு இணைக்கப்பட்டு, வலையின் மத்தியில் 100 மி.மீ இடைவெளிக்கு 20 ×5 மி.மீ 2 இரும்பு பார் பயன்படுத்தப்படாது, இணைக்கப்பட்ட வலையில் 75 மி.மீ. இடைவெளிக்குப் பதிலாக 80 மி.மீ., 90 மி.மீ. இடைவெளி காணப்பட்டதுடன் துருத் தடுப்புப் பூச்சு பூசப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | தம்பதெனிய ஷாந்த பண்டார மைதானத்தில் நடைபாதை அமைக்கும் செயற்திட்டத்தில் வேலை விடய இலக்கம் 04 இன் கீழ் 1:2:4 எனும் கலவையில் கொங்கிறீட் இடுவதற்கு 16.80 கன மீற்றரிற்கு ரூபா. 15,817 வீதம் ரூபா. 265,726 செலுத்தப்பட்டிருந்தது. 06 இடங்களில் பௌதீக பரிசோதனையின் போது 04 இடங்களிலும் நியமிக்கப்பட்ட உயரமான 225 மி.மீ. காணப்படாததுடன் பல இடங்களில் அகலம் 100 ,மற்றும் 112 ஆகக் காணப்பட்டது. | மதிப்பீட்டின் பிரகாரம் உரிய செயற்திட்டம் செயற்படுத்தப்படுவது தொடர்பாக மேற்பார்வை செய்யப்பட வேண்டும். | அவை நிர்ணயிக்கப்பட்ட அளவிற்கு அமைக்கப்பட நடவடிக்கை எடுப்பதாக தயவாக அறியத் தருகிறேன். |